நாமக்கல் மாவட்டம் ... நெஞ்சன் – ... சிவக்குமார்

www.freetnbooks.com

# அரையாண்டுத் தேர்வு-2025

வகுப்பு : **10**
காலம் : 3.00 மணி

## சமூக அறிவியல்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 100

**குறிப்புகள் :**

- மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப் பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி-அ

**I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **14x1=14**

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் எனக் கூறியவர் யார் ?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
2. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்கக் கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது ?
அ) க்வாடல்கெனால் போர் ஆ) மிட்வே போர்
இ) லெனின் கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன் போர்
3. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
i) இராமகிருஷ்ணா மிஷின் கல்வி, உடல் நலம், பேரிடர்களின் போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூக பணிகளில் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.
ii) பேரின்பநிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்மீகரீதியாக இறைவனோடு இணைவதை இராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்.
iii) இராமகிருஷ்ணர், இராமகிருஷ்ணா மிஷனை ஏற்படுத்தினார்.
அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி இ) (iii) சரி ஈ) (i) மற்றும் (iii) சரி
4. வஹாபி கிளர்ச்சிக்குத் தலைமையேற்றவர் ......................
அ) சிராஜ்–உத் –தௌலா ஆ) ஹாஜி ஷரியத்துல்லா இ) டுடு மியான் ஈ) டிடு மீர்
5. "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார் ?
அ) அன்னிபெசன்ட் ஆ) M.வீரராகவாச்சாரி இ) B.P.வாடியா ஈ) G.S.அருண்டேல்
6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ..................................
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்
7. பொன்புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது ?
அ) உருளைக்கிழங்கு ஆ) எண்ணெய் வித்துக்கள் இ) தேன் ஈ) சணல்
8. இந்தியாவின் முக்கிய இறக்குமதிப் பொருள்
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்
9. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் ........................
அ) தர்மபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு
10. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர்
அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள் இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல்
11. மக்களவை தேர்தலில் போட்டியிடத் தேவையான குறைந்தபட்ச வயது........................
அ) 18 ஆ) 21 இ) 25 ஈ) 30
12. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்
அ) மவுண்டபேட்டன் பிரபு ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப் இ) கிளமண்ட் அட்லி ஈ) மெக்கலே பிரபு
13. காட் (GATT) இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்
அ) டோக்கியா ஆ) உருகுவே இ) டாக்குவே ஈ) ஜெனிவா
14. முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை (GST) அறிமுகப்படுத்திய நாடு.
அ) இந்தியா ஆ) பிரான்ஸ் இ) இங்கிலாந்து ஈ) சீனா

### பகுதி-ஆ

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **10x2=20**

15. ஐரோப்பியா போர்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?
16. முத்துத் துறைமுக நிகழ்வைப் பற்றி எழுதுக
17. களக்காடு போரின் முக்கியத்துவம் என்ன ?
18. ஜாலியன் வாலபாக் படுகொலை பற்றி விவரிக்கவும் ?



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com

19. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
21. மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.
22. தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.
23. கோயம்புத்தூர் ஏன் தென்னிந்தியாவில் "மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது ?
24. இந்தியா அரசியலமைப்பில் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைப் பட்டியலிடுக.
25. பஞ்சசீலக் கொள்கைகளில் ஏதேனும் நான்கினை பட்டியலிடுக.
26. தனிநபர் வருமானம் என்றால் என்ன ?
27. தமிழ்நாட்டின் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களைக் குறிப்பிடுக.
28. "குயிலி" பற்றி சிறு குறிப்பு வரைக.

## பகுதி-இ

**IV. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 42 கட்டாயமாக விடையளிக்கவும்.** **10x5=50**

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    i) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல் படை .............. என அழைக்கப்பட்டது.
    ii) நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் .............. ஆவார்.
    iii) கட்டபொம்மன் .............. என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
    iv) காந்தியடிகளின் அரசியல் குரு .............. ஆவார்
    v) .............. தமிழ் மொழியியல் தூய்மை வாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.
30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களைக் கோடிட்டுக் காட்டுக.
31. 1857 ஆம் ஆண்டின் பெரும் புரட்சிக்கான காரணங்கள் குறித்து ஆராயவும்.
32. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமாக பங்களிப்பை மதிப்பிடுக.
33. அ) வேறுபடுத்துக
    i) வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
    ii) உள்நாட்டு வணிக மற்றும் பன்னாட்டு வணிகம்
    காரணம் கூறுக.
    i) கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
34. இந்தியாவின் மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.
35. நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் சிக்கல்கள் யாவை ?
36. காவேரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக
37. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை ?
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு வரைக.
39. GDP கணக்கிடும் முறைகள் யாவை ? அவைகளை விவரி.
40. நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. கீழ்க்காண்பவற்றிற்கு காலக்கோடு வரைக.
    1920 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்டு உட்பட்ட ஐந்து முக்கிய உலக நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைக.
42. **இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.**
    i) மீரட் ii) பாரக்பூர் iii) தண்டி iv) சௌரி சௌரா v) வேதாரண்யம்

## பகுதி-ஈ

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **2x8=16**

43. அ) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க **(அல்லது)**
    ஆ) கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றிய ஒரு கட்டுரை வரைக
44. **அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்கானும் இடங்களைக் குறிக்கவும்.**
    i) காரகோரம் ii) பாக் நீர் சந்தி iii) தென்மேற்கு பருவக் காற்று வீசும் திசை iv) கரிசல் மண் பகுதி
    v) ஏதேனும் ஒரு இரும்பு எஃகு தொழிற்சாலை vi) தேயிலை விளையும் பகுதி vii) ஹிராகுட் அணை
    viii) மக்கள் அடர்த்தி அதிகம் கொண்ட மாநிலம் **(அல்லது)**
    **ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்கானும் இடங்களைக் குறிக்கவும்.**
    i) நீலகிரி ii) காவேரி ஆறு iii) சோழ மண்டல கடற்கரை iv) மன்னார் வளைகுடா v) சென்னை
    vi) காப்பி விளையும் பகுதி vii) நெய்வேலி viii) கேரளா



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner